27th January 1970]

திரு. எம். ராஜா அய்யர் : இவ்வளவு கிணறுகள் இருந்தபோதிலும் கூட முனிசிபல் வாட்டர் சப்ளையை எதிர்பார்த்துத்தான் இந்த ஆஸ்பத்திரி நடக்க வேண்டியிருக்கிறது. இந்த ஆஸ்பத்திரி வைகை நதிக் கரையில் இருக்கிற காரணத்தினால், இது தன்னிறைவு பெறத்தக்கதாய்—செல்ஃப் சபிஷியண்ட்டாக—இதற்காக என்று தனி வாட்டர் சப்ளை ஸ்கீம் ஒன்றை உருவாக்க சர்க்கார் முன்வருமா ? நான் இரண்டு வார காலம் அந்த ஆஸ்பத்திரியில் இருந்திருக்கிறேன். நோயின் தொல்லையைவிடத் தண்ணீர் இல்லாமல் தவித்தது பெரும் தொல்லையாக இருந்தது. அதைப் போக்க இந்த ஆஸ்பத்திரி முனிசிபல வாட்டர் சப்ளை ஸ்கீமை டிபெண்ட் செய்யாமல், தனியாக இதற்கென்று வாட்டர் சப்ளை ஸ்கீம் ஒன்றை இந்த சர்க்கார் செயல்படுத்துமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பொதுவாக கோடை காலத்தில் தண்ணீருக்குப் பற்றுக்குறை ஏற்படுவது இயற்கை. அதுவும் இந்த ஆண்டு, அதிக வறட்சியின் காரணமாக என்றைக்கும் ஏற்படாத அளவுக்கு, பற்றுக் குறை ஏற்பட்டது. இருந்தும் மதுரை நகரத்தில் தண்ணீர் பற்றுக் குறை இருந்தபோது, துளைக் கிணறுகள் 7, 8 போடப்பட்டதன் காரணமாக, இந்த மருத்துவ மனைக்குத் தேவையான தண்ணீர் ஓரளவுக்குக் கிடைத்துவந்தது. மதுரை நகரத்திற்கு 17 லட்சம் ரூபாய் செலவில் ஒரு பெரிய தண்ணீர் திட்டம் போடப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு இன்னொரு திட்டமும் போடப்பட்டிருக்கிறது. அவைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டால், தண்ணீர் கஷ்டம் தீர்ந்துவிடும். இப்போது இருக்கிற துளைக் கிணறுகள் இந்த மருத்துவ மனைக்குத் தேவையான அளவுக்குத் தண்ணீர் சப்ளை செய்து வருகின்றன.

திரு. வி. தங்கபாண்டியன் : மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரிக்கு டி.வி.எஸ். ஸ்தாபனமும் ரோட்டரி ஸ்தாபனமும் துளைக் கிணறுகள் மூலம் கொடுக்கிற தண்ணீர் வசதி தொடர்ந்து அளிக்கப்படுமா, அல்லது இடைக் காலத்தில் நிறுத்திக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மருத்துவ மனைக்குப் பயன்பட வேண்டும் என்ற அடிப்படையில்தான் ரோட்டரி சங்கத்தால் இரண்டு துளைக் கிணறுகள் போடப்பட்டு, மருத்துவ மனைக்கு ஒப்படைத்திருக்கிறார்கள். அடுத்து, டி. வி. எஸ். ஸ்தாபனம் ஏற்கனவே பழுதுபட்டு பயன்படாமல் இருந்த கிணறுகளை செப்பனிட்டு நாளொன்றுக்கு 1,000 காலன் தண்ணீர் சப்ளை செய்கிற மாதிரி தந்திருக்கிறார்கள். அவர்கள் திரும்ப எடுத்துக் கொள்ளும் அபிப்பிராயத்தில் இல்லை.

Teachers Training College, Pudukkottai.

* 60. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether any representation has been received by the Government during August 1968 requesting to admit at least 10 lady students in the Tamil Teachers's Training Course in Teachers Training College, Pudukkottai from the academic year 1969–70 ; and

(*b*) if so, the action taken thereon ?

ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, புதுக்கோட்டை.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1969–70-ம் கல்வி ஆண்டு தொடங்கி புதுக்கோட்டை ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் தமிழ் ஆசிரியர் பயிற்சிப் பாட முறையில் 10 மாணவிகளையாவது சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டு 1968 ஆகஸ்ட் திங்களில் முறையீடு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

[27th January 1970

(இ) ஆமெனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இந்த விஷயம் சென்னை பல்கலைக் கழகத்துடன் கடிதப் போக்கு வரத்தில் உள்ளது.

திரு. கே. அறிவழகன் : தமிழாசிரியர்கள் பயிற்சிப் பாடமுறை ஓரள வுக்கு பி.டி. ஆசிரியர்களுடைய பயிற்சியின் பாட முறைக்கு ஒத்ததாக இருக்கிறது. இதற்கும் பி.டி. பட்டம் தர வேண்டுமென்று சென்னைப் பல்கலைக் கழகத்தோடு வேறு விஷயம் குறித்து இந்த அரசு பேச இருக்கும் போது இதையும் கலந்து ஆராயுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : பி.டி. பட்டம் பெற வேண்டுமென்றால், பள்ளி இறுதி வகுப்பு படித்து, பிறகு பி.யு.சி. படித்து, பிறகு பி.ஏ. படித்து வருகிறவர்களுக்குத்தான் தரப்படுகிறது. தமிழை இரண்டாவது பாடமாக எடுத்துத் தேறுகிறவர்களுக்கு பி.டி. தரப்படுகிறது. வித்துவான் பட்டம் படிக்கிறவர்களுக்கு பி.டி. பட்டம் கொடுக்கும் நிலையில் இல்லை. இரண்டாம் நிலை தமிழாக சிலவற்றில் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டிற்குள் இது எதற்குள் வருகிறதோ அதற்குள் அது அடக்கம்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : புதுக்கோட்டை ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் தமிழாசிரியர் பயிற்சி அளிக்க வாய்ப்பளிக்கப்படவில்லை. மாண விகளுக்குப் பயிற்சி அளிக்க வாய்ப்பில்லை என்பதுதான் கேள்வி. பெண் தமிழாசிரியைகளுக்கு வேறு எங்காவது பயிற்சி அளிக்க வாய்ப்பு இருக் கிறதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : சென்னையில் லேடி வெல்லிங்டன் கல்லூரியில் பெண்கள் தமிழாசிரியர் பயிற்சி பெற வாய்ப்பிருக் கிறது. புதுக்கோட்டையில் பத்து இடங்கள் ஒதுக்க வேண்டுமென்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. முன்னாள் பல்கலைக் கழகத் துணை வேந்தரையும் கல்வித் துறை இயக்குநரையும் ஆண்கள் பயிற்சிக் கல்லூரியில் பெண்களுக்கு இடம் ஒதுக்குவது பற்றிக் கேட்டபோது, அதைக் கட்டுப்படுத்துவதும், ஒழுங்கு முறைகளைக் காப்பாற்றுவதும் கடினமாகும் என்றும், பெண் களுக்கு இடம் ஒதுக்குவதால் அவர்கள் தங்குவதற்கான, ஓய்வு பெறு வதற்கான வசதிகளைச் செய்து கொடுத்த பிறகு, பெண் ஆசிரியர்கள் நியமித்ததற்குப் பிறகு வேண்டுமானால், இந்தத் திட்டத்தை ஏற்க முயல லாம் என்று சொல்லப்பட்டது. பல்கலைக் கழகத்தில் பெண்களுக்கு தனிப் பயிற்சிக் கல்லூரியில் இடம் ஒதுக்கப்பட்டிருப்பதால், அங்கே கொடுக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அதை அரசாங்கம் பல்கலைக் கழகப் பரிசீலனைக்கு அனுப்பியிருக்கிறது.

திரு. எம். ராஜா அய்யர் : நமது மாநிலத்தில் மொத்தம் எத்தனை இடங்கள் இப்படி இருக்கின்றன ? அவற்றில் எத்தனை பெண்களுக்கு ? எத்தனை ஆண்களுக்கு ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : என்னிடம் உள்ள குறிப்பில் லேடி வெல்லிங்டன் பற்றித்தான் இருக்கிறது. அது தவிர வேறு குறிப்புகள் இல்லை.

திரு. கே. அறிவழகன் : லேடி வெல்லிங்டன் கல்லூரிக்கு விண்ணப் பம் செய்கிற மகளிர் தமிழ் ஆசிரியர் அனுபவம் பெற்ற ஆசிரியர்களாக இருந்தாலும்கூட, இடம் பெற முடியாத அளவுக்குக் குறைந்த இடங்கள் தான் இருக்கின்றன அனுபவம் பெற்ற ஆசிரியைகள் அத்தனை பேரும் பயிற்சி பெறும் அளவுக்கு அதிக மகளிர்களைச் சேர்த்துக் கொள்ள வசதி செய்யும் யோசனை இருக்கிறதா ?

27th January 1970]

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும் அடிப்படையில், எவ்வளவு தமிழ் ஆசிரியர்கள் 4, 5 ஆண்டுகளுக்குத் தேவைப்படும் என்று கணக்கெடுத்து, இப்போது ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் எவ்வளவு இருக்கின்றன என்று கணக்கிட்டு, இப்போது இருக்கின்ற இடங்கள் போதுமானதாக இல்லை என்று கருதினால், அதற்கான வழிவகை காண்பதற்கான நடவடிக்கை எடுக்கலாம். மாண்புமிகு உறுப்பினரின் கருத்து மனதில் கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கும் போது ஆலோசிக்கப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : பெண்களுக்கான தமிழ் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் தென் மாவட்டங்களில் கிடையாது. சென்னையில் வெல்லிங்டன் கல்லூரியில்தான் இருக்கிறது. தென் மாவட்டங்களில் பத்துப் பெண்களுக்காவது தமிழாசிரியர் பயிற்சி கொடுக்கப்பட வேண்டுமென்பதுதான் என் கருத்து. அதற்கான விடுதிகள் இல்லாவிட்டாலும், புதுக்கோட்டையில் அண்மையில் இருக்கிறவர்கள் தங்கள் வீடுகளில் இருந்து கொண்டு படிப்பதற்கு வசதி செய்யலாம். தென் மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு வந்து படிக்க முடியாத குறைபாடு இருக்கிறது. தமிழாசிரியர்களுடைய பெண்கள்தான் பெரும்பாலும் இடமில்லாமல் இருக்கிறார்கள் என்று நான் அறிகிறேன். அந்த 10 மாணவிகளுக்கேனும் விடுதி வசதி இல்லாவிட்டாலும், தனிப்பட்ட முறையில் வந்து படிப்பதற்கு அனுமதித்தால், உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற கருத்து மனதில் கொள்ளப்பட்டு தென் மாவட்டங்களில் பெண்கள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் எங்காவது ஏற்பாடு செய்ய முடியுமா என்று அரசு ஆராயும்.

City Compensatory Allowance

* 61 *Q.*—THIRU M. SANKARALINGAM PILLAI : **Will the Hon. the Minister for Education and Health be pleased to state :**

(*a*) **whether any representation has been received by the Government to the effect, that the teachers employed in the Panchayat Union schools in the surrounding areas of Madras City like Madhavaram, Chithalapakkam and Pallavaram have not been granted City Compensatory Allowance ; and**

(*b*) **if so, the action taken thereon ?**

நகர ஈட்டுப்படி.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை நகரத்தின் சுற்றுப்புறத்தைச் சார்ந்த மாதவரம், சித்தலப்பாக்கம், பல்லாவரம் ஆகிய இடங்களிலுள்ள பஞ்சாயத்து ஒன்றிப்பு பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு நகர ஈட்டுப்படி வழங்கவில்லை என அரசுக்கு முறையீடு வந்துள்ளதா ?

(இ) அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) வினாவில் குறிப்பிட்டுள்ள இடங்களில் ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள் இவற்றின்கீழ் இயங்கி வரும் பள்ளிகளிலும் மானிய உதவி பெறும் கல்வி நிறுவனங்களிலும் பணிபுரிகிற ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாத பிற பணியாளர்களுக்கு 1968, மார்ச் திங்களில் நகர ஈட்டுப்படித் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.